செய்தி வெளியீடு எண். 907 நாள்.30.11.2009

**மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 2.12.2009 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்கள்.**

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 2.12.2009 (புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், எஸ்.எல்.பி.அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தை திறந்து வைத்து, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கி, அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியினை தொடங்கி வைத்து, தேங்காப்பட்டணம் மீன்பிடித் துறைமுகம், புத்தேரி இரயில்வே மேம்பாலம், மார்த்ததாண்டம் புதிய பேருந்து நிலையம்,வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, மாற்றுத்திறனுடையோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்கள்.

முன்னதாக மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ்ராஜன் தலைமையுரை ஆற்றுகிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப. வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.ஜே.ஹெலன் டேவிட்சன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அ.ராஜன், திரு.த.தியோடர் ரெஜினால்டு, திரு.எஸ்.ஜெயபால், திரு.சீ.ஜான் ஜேக்கப், திரு.ஞா.ஜாண்ஜோசப், திருமதி.ரா.லீமாறோஸ், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.டி.அஜிதா மனோதங்கராஜ், மாவட்ட வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் திரு.ஜி.எம்.ஷா, தமிழ்நாடு மீனவர் நலவாரிய துணைத் தலைவர் திரு.இரா.பெர்னார்டு, நாகர்கோவில் நகர்மன்றத் தலைவர் திரு.வே.அசோகன் சாலமன், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திரு.எம்.சோமு, இராமபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.த.சாம் எப்சிடேனிபாய் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு.எம்.சந்தோஸ்குமார் அவர்கள் நன்றியுரையாற்றுகிறார்கள்.

இவ்விழாவிற்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப. அவர்கள் அன்புடன் அழைக்கிறார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.